# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2094 - 2018 ඔක්තෝබර් මස 19 වැනි සිකුරාදා - 2018.10.19

*2094 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2142* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2149* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


*2141*-B *81459-5,403 (2018/10)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

இலங்கை நீதிச் சேவையில் நிலவும் வெற்றிடங்கள்

இலங்கை நீதிச்சேவையின் II ஆம் வகுப்பின் I ஆம் தரத்திற்குரிய (நீதிவான்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்கள், பூரணப்படுத்தப்பட்ட விண்ணபப்படிவங்களை 19.11.2018 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 75,000-10×1,630- ரூபா 91,300 (இச்சம்பளத் திட்டமானது முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 01/ 2018 இக்கு அமைவாக திருத்தப்படும்.) சம்பளத்திற்கு மேலதிகமாக நீதிமன்ற அதிகாரிகளுக்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

03. **சகல விண்ணப்பதாரிகளும்**.-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ஆ) நன்னடத்தையும் தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்;
(இ) இலங்கையின் அனைத்து பாகங்களிலும் சேவையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. **தகைமைகள்**.-

(அ) இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான திகதியன்று தொழில் நியாயசபையின் தலைவராக இரண்டு வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை கொண்டிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான திகதியன்று நான்கு வருடங்களுக்கு குறையாமல் செயற்திறன் மிக்கவாறு வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது ஈடுபட்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்; அல்லது

(இ) இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான திகதியன்று ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தைக் கொண்ட வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்; அல்லது

(ஈ) இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான திகதியன்று ஏதேனுமொரு கம்பனியில் அல்லது வங்கியில் அல்லது நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக்காலத்தை கொண்டவராகவும், அக்காலப்பகுதியில் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் தோன்றிய வழக்கறிஞராகவும் இருத்தல் வேண்டும்.

05. சகல விண்ணப்பதாரிகளும் எழுத்துப் பரீட்சைக்கு தோற்ற வேண்டியதுடன் அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு**.- (1) விண்ணப்பப்படிவக் கட்டணமான 3,000 ரூபாவினை மக்கள் வங்கியின் டாம் வீதிக் கிளையில் பேணப்பட்டு வரும் 297100199025039 என்ற இலக்கத்தை உடைய "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு" எனும் கணக்கில் இடும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட வைப்புச்சீட்டினை பதிவுத் தபாலினூடாகவோ அல்லது நேரில் அலுவலகத்திற்கு வந்து சமர்ப்பிப்பதன் மூலமாகவோ விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பணம் செலுத்துவதற்காக வைப்புச்சீட்டினை நிரப்பும் போது வைப்புச் சீட்டின் உரிய இடத்தில் விண்ணப்பதாரியின் பெயர், முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரிகள் பதிவுத்தபாலினூடாகவோ அல்லது நீதிச் சேவை ஆணைக்குழு செயலகத்திற்கு நேரில் சமுகமளித்தோ தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கலாம்.

(3) பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்கும் சமர்ப்பிப்பதற்குமான முகவரி :

செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு,
நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12.

எச். சஞ்ஜீவ சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2018, ஒற்றோபர் 01.

10-451

---

## இலங்கைப் பாராளுமன்றம்

பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தினது பணியாட்டொகுதியில் வெற்றிடங்கள் நிலவுகின்ற கீழ்க்காணும் பதவிகளுக்கு சிறந்த உடல் நலமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2018, நவெம்பர் 9 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கப்படும் பதவி" குறிப்பிடப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

01. **பொருட்கள் ஏற்கும் உதவியாளர் .-**

1.1. **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிற்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 25,520-9×270-10×300-6×330- ரூபா 32,930 ஆகும். ஆகையால், நியமனத் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் மேற்குறித்த சுற்றறிக்கையிலுள்ள II ஆம் அட்டவணையின் பிரகாரம் ரூபா 20,248.00 மாதாந்த சம்பளப் படிநிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் செலுத்தப்படும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 50,000.00 ஆகும்).

1.2. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.3. **கல்வித் தகைமைகள்.**- சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தி மற்றும் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தி அடங்கலாக கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

1.4. **தொழில் தகைமைகள்.**- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (SLITHM)/தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையில் (NAITA) அல்லது இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) அல்லது அதற்கு இணையான ஒரு வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தில் 05 மாதத்திற்கு குறையாத கால ஆரம்ப சமையல் சான்றிதழ் பாடநெறியை /ஆரம்ப உணவு, பான சான்றிதழ் பாடநெறியை பின்பற்றி அதனை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.

1.5. **தொழில் அனுபவம்.**- ஹோட்டல் துறையில் பொருட்கள் ஏற்கும் உதவியாளர் / சமையல் உதவியாளர் / சிற்றுண்டிச்சாலை உதவியாளர் அல்லது அதற்கு இணையான ஒரு பதவியில் 06 மாதங்களுக்கு குறையாத காலம் பணியாற்றியிருத்தல்.

1.6. **ஆட்சேர்ப்புத் திட்டம்.**- எழுத்து/தொழில் பரீட்சைகள் மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

02. **உணவு, பான உதவியாளர்**

2.1. **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 28,250-9×300-3×380-35,390 ஆகும். ஆகையால், நியமனத் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் மேற்குறித்த சுற்றறிக்கையிலுள்ள II ஆம் அட்டவணையின் பிரகாரம் ரூபா 22,412.00 மாதாந்த சம்பளப் படிநிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் செலுத்தப்படும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 53,000.00 ஆகும்).

2.2. **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று 22 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.3. **கல்வித் தகைமைகள்.**- சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் திறமை சித்தி மற்றும் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தி அடங்கலாக கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

2.4. **தொழில் தகைமைகள்.**- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் (SLITHM)/ தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையில் (NAITA)/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) அல்லது அதற்கு இணையான ஒரு வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத கால உணவு பான ஊழியர் பாடநெறியை (NVQ3 அல்லது அதற்கு உயர்ந்த) பின்பற்றி அதனை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்.

2.5. **தொழில் அனுபவம்.**- ஐந்து நட்சத்திர தர ஹோட்டல் ஒன்றில் சிற்றுண்டிச்சாலை ஊழியர் அல்லது அதற்கு இணையான ஒரு பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத காலம் பணியாற்றியிருத்தல்.

2.6. **ஆட்சேர்ப்புத் திட்டம்.**- எழுத்து/ தொழில் பரீட்சைகள் மற்றும் ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

03. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. இந்தப் பதவிகளுக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அநாதைகள், விதவைகள் /தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ஒரு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

04. கீழ்க்காணும் சான்றிதழ்களின் (மூலப்பிரதிகளல்ல) பிரதிகளை விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

05. அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் /அரசாங்க கூட்டுத்தாபனங்களில் மற்றும் நியதிச்சட்டசபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள /நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

06. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

07. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்க பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ் களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள /நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

ஜே. ஏ. ரோஹனதீர,
பதில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2018, ஒற்றோபர் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

.......................... பதவிக்கான விண்ணப்பபம்

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :-----.
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) :-----.
(இ) முழுப்பெயர் ( Mr./Mrs./Miss) (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :-----.

02. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

03. (அ) தனிப்பட்ட முகவரி :-----.
தொலைபேசி இலக்கம் :-----.
(ஆ) அலுவலக முகவரி :-----.
தொலைபேசி இலக்கம் :-----.
(பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி)
(இ) தனிப்பட்ட : ☐ அலுவலக: ☐
(கூட்டினுள் √ அடையாளமிடுக.)

04. (i) பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
(ii) 2018.11.09 ஆந் திகதியன்று வயது: வருடங்கள்:-.........மாதங்கள்:-....... நாட்கள்:-........

05. விவாகமானவரா /விவாகமாகாதவரா என்ற விபரம் :-----.

06. பால்: ஆண் /பெண் :-----.

07. இலங்கைப் பிரஜையா எனும் விபரம் :-----.

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| பரீட்சை | பாடம் | சித்தி | சித்தியடைந்த ஆண்டு |
|---|---|---|---|
| க. பொ. த. (சா/த) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. தொழில் தகைமைகள் பற்றிய விபரம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :- .......................................
..............................................................................................................................................................................................

10. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| ஹோட்டல் | நட்சத்திர எண்ணிக்கை (உணவு பான உதவியாளர் பதவிக்கு மாத்திரம்) | சேவைக் காலம் | பதவி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:
 (அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
 (ஆ) தற்போது வகிக்கும் பதவி :----.
 (இ) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
 (ஈ) மாதாந்த அடிப்படை சம்பள அளவுத்திட்டம் :----.
 (உ) கொடுப்னவுகள் :----.
 (ஊ) முழுமொத்த சம்பளம் :----.

12. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக :----.

13. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா? எனின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிற்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

----,
திகதி :----. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் /அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் /நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில் ........... பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி ......................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானவை எனவும் இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் சான்றுபடுத்துகின்றேன். இப்பதவிற்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் /விடுவிக்கப்பட மாட்டார்.

----,
திகதி :----. திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.
(பதவி முத்திரை)

10-1515

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2018

**Limited Competitive Examination For the Recruitment to the Grade III of the Sri Lanka Pricipals' Service - 2018**

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதிய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2019 சனவரி மாதம் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்தில் காணப்படும் 1918 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக இவ் அறிவித்தலுக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய சகல தகைமைகளையும் 2018.06.01 ஆந் திகதியன்று பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

இவ்வறிவித்தலில் "சேவை" என்ற பதத்தின் கருத்து இலங்கை அதிபர் சேவையாகும். "பிரமாணக் குறிப்பு" எனக் கருதப்படுவது இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பாகும்.

2. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தமது திணைக்களப் பொறுப்பாளரின் பரிந்துரையுடன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல், வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு 2018.11.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2018" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

3. **பரீட்சைத் திகதி மற்றும் நகரம்** :

3.1 இப்பரீட்சை 2019, சனவரி மாதத்தில் நடைபெறும், பரீட்சையை ஒத்திவைத்தல் அல்லது இரத்து செய்வதற்கான அதிகாரம் கல்விச் செயலாளருக்கு உரியதாகும்.

3.2 கீழ்க் குறிப்பிடப்பட்ட மாவட்டங்களின் பிரதான நகரங்களில் தாபிக்கப்படும் பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறும். பரீட்சை மத்திய நிலையங்களைத் தாபிப்பதற்குப் போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் அதற்கு அண்மித்த நகரப் பரீட்சை மத்திய நிலையத்திற்கு விண்ணப்பதாரர்கள் மாற்றப்படுவர்.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| குருநாகல் | 10 |
| புத்தளம் | 11 |
| அநுராதபுரம் | 12 |
| பொலன்னறுவை | 13 |
| பதுளை | 14 |
| மொனராகலை | 15 |
| இரத்தினபுரி | 16 |
| கேகாலை | 17 |
| அம்பாறை | 18 |
| மட்டக்களப்பு | 19 |
| திருகோணமலை | 20 |
| யாழ்ப்பாணம் | 21 |
| முல்லைத்தீவு | 22 |
| மன்னார் | 23 |
| கிளிநொச்சி | 24 |
| வவுனியா | 25 |

போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாத பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சை நடாத்துவதை இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

4. **சேவை நிபந்தனை**.- இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் இதற்குப் பின்னர் மேற்கொள்ளும் திருத்தங்களுக்கும், அரச சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்.

5. **சம்பள அளவு**.- ஜீ. ஈ. - 4-2016 - ரூபா 35,280 - 7 × 680 - 6 × 825 - 11 × 1,335 - 14 × 1,650 - ரூபா 82,775.

6. **தகைமைகள்** :

6.1 கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகள் கொண்ட சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்கள் இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறுவர்.

6.2 **கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமைகள்** :

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தினால் பெற்றுக்கொண்ட கல்விமாணிப்பட்டம்

அல்லது

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு பாடத்துறையிலும் பட்டத்துடன் பட்டப்பின்பட்ட கல்வி டிப்ளோமா

அல்லது

ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்/தேசிய போதனாவியல் டிப்ளோமா

அல்லது

(iii) தேசிய போதனாவியல் டிப்ளோமா/ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

6.3 **அனுபவம்** :

(அ) மேற்கூறப்பட்ட 6.2 (i) அல்லது 6.2 (ii) தகைமை பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலம் மற்றும் அக்காலத்திற்குள் சகல சம்பளப் படி உயர்வுகளையும் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) மேற்கூறப்பட்ட 6.2 (iii) தகைமை பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் ஆறு (06) வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அக்காலத்திற்குள் சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றிருத்தல்.

6.4 **உடல், உள மனோநிலைத் தகைமைகள்**:

சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றும் பதவியில் கடமையினை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல், உள தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு**: விண்ணப்பம் கோரும் தினமன்று மேற்கூறப்பட்ட அண்மித்த சேவைக்காலத்திற்குள் சகல சம்பளப்படி உயர்வுகளையும் உரிய தினத்திற்குள் பெறாதிருக்கும், இக்காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட குற்றத்திற்காக ஏதாவது தண்டனை (எச்சரிக்கை தவிர) பெற்றிருக்கும் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையற்றவராவார்.

6.5 **ஏனைய தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ii) அதிபர் சேவைக்குச் சேர்த்துக்கொள்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்காக மூன்று (03) அமர்வுகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் அனுமதி இல்லை;

(iii) அதிபர் சேவைக்குச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்தன்று அந்தத் தகைமைகளைஅனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;

(iv) இலங்கை ஆசிரியர் சேவையில் நிரந்தரமானவர்களாக இருத்தல் வேண்டும்.

6.6 **வயது** :

உயர்ந்தபட்ச வயது 2018.06.01 ஆந் திகதியன்று 50 வயதாக இருக்க வேண்டும். (இதற்கமைய 1968.06.01 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்த தினத்தை கொண்டுள்ளவர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகைமை கொண்டவர்களாவர்.)

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் அறுநூறு ரூபா (ரூபா 600.00) ஆகும். பரீட்சைக் கட்டணத்தை விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு

20-03-02-13 இன் கீழ் அரச வருமானத்தில் வைப்பில் இடக்கூடியவாறு நாட்டின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் நிதி செலுத்தி, விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டவேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக செலுத்தும் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளத் திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

8. **விண்ணப்பிக்கும் முறை** :

(i) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி 8 1/2" × 12" அளவுக் கடதாசியில் தயாரித்து பரீட்சார்த்தியின் கையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக அங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும். (இல. 01 தொடக்கம் 07 வரை முதல் பக்கத்திலும் எஞ்சிய பகுதி மறுபக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.)

(ii) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை கொண்டுள்ள மொழி மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(iii) விண்ணப்பப்படிவத்தினைப்பொறுப்பேற்கும்இறுதித்தினத்திற்குப்பின்னர்கிடைக்கும்விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சகல முறைகளிலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவம் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக்கிடைப்பது தொடர்பிலான முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

(iv) விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது என்பதுடன், பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்டவுடன் அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். பரீட்சை நடைபெறும் தினத்திற்குக் குறைந்தபட்சம் 05 நாட்களுக்கு முன்னர் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்காத பரீட்சார்த்திகள் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பில் பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொண்டு வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அவ்விபரங்களுடன் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியினைத் துரிதகதியில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி வினவுவது மிகப் பயன்மிக்கதாக அமையும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவக்கூடிய எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினைத் தயாராக வைத்திருப்பது பயன்மிகக்தாகும்.

9. **பரீட்சைக்குத் தோற்றும் முறை** :

(i) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதிற்குட்பட்ட, விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அத்தினத்தற்கு முன்னர் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். தமது பிரவேச அனுமதிப் பத்திரத்ததைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ii) பரீட்சார்த்தி தமக்கு உத்தரவிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன் பரீட்சையின் முதலாவது வினாத்தாளுக்கு தோற்றும் சந்தர்ப்பத்தில் தமது ஒப்பத்துடன் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் பொறுப்பளிக்க வேண்டும்.

**குறிப்பு**: பரீட்சார்த்திக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் அப்பதவிக்கு நியமிப்பதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டல்ல என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

10. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்** : தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு சகல பரீட்சார்த்திகளும் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;

(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

11. **போலித் தகவல்களை வழங்குதல்.-** பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னரான எந்த சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்தை இரத்து செய்ய வாய்ப்பு உண்டு. பரீட்சார்த்தியால் ஏதேனுமொரு விடயம் உண்மைக்குப் புறம்பானதாக சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரியவரும் பட்சத்தில் அல்லது ஏதேனும் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தினை மறைத்திருப்பின் பின்னர் அது தெரியவரும் பட்சத்தில் அவர் அரச சேவையில் இருந்து பதவிறக்கப்படவும் இடமுண்டு. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். இந்த சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்குட்பட வேண்டிய நிலை அவருக்கு ஏற்படும்.

12. **பரீட்சைக்குத் தோற்றும் மொழி** :

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடைபெறும் ;

(ii) பரீட்சார்த்தி தாம் விரும்பிய மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் ;

(iii) பரீட்சார்த்தி சகல வினாப்பத்திரங்களுக்கும் தாம் கோரிய மொழிமூலம் மாத்திரம் விடையளிக்க வேண்டும் ;

(iv) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியினை மாற்றியமைக்க பரீட்சார்த்திக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

13. **ஆட்சேர்ப்பு முறை** : கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான எழுத்து மூல வினாத்தாள்களைக் கொண்ட போட்டிப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெறும் தொடருக்கமைய வெற்றிட எண்ணிக்கையைவிட இரு மடங்கு எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதன் மூலம் தகைமைகளைப் பெறுவோர் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சை சபை நியமிக்கப்படுவது சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சின் செயலாளர் மூலமாகும்.

13.1 **எழுத்து மூலப் பரீட்சை** : மூன்று (03) வினாத்தாள்களைக் கொண்டமைந்துள்ளது :

| | விடயம் | உயர்ந்த பட்ச புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|
| (i) | கிரகித்தல் | 100 | 1 1/2 மணித்தியாலம் |
| (ii) | பாடசாலை நிர்வாகம் பற்றிய நிகழ்வுகளின் ஆய்வு | 100 | 2 மணித்தியாலயம் |
| (iii) | உளச்சார்பு மற்றும் பொது அறிவு | 100 | 1 1/2 மணித்தியாலம் |

* சகல பாடங்களிலும் சித்தியடைவதற்காக அவ்வவ் பாடங்களில் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

13.2 **பாடவிதானம்** :

(i) **கிரகித்தல்** :
வாசகங்கள் அல்லது ஒரு சில வாசகங்களின் விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவினை அளவீடு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட வினாத்தாள் ஆகும்.

(ii) **பாடசாலை நிர்வாகம் பற்றிய நிகழ்வுகளின் ஆய்வு** :
பாடசாலை மற்றும் முகாமைத்துவத்தில் ஏற்படக்கூடிய ஒரு சில சம்பவங்களைச் சமர்ப்பித்து அச்சம்பவங்களுக்கு வரவேற்பளித்தல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் பரீட்சார்த்தியின் கருத்துக்களை அறிந்து கொள்வதனை நோக்காகக் கொண்டு இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது.

(iii) **உளச்சார்பு மற்றும் பொது அறிவு** :
தேசிய, வலய மற்றும் உலகின் பல்வேறுபட்ட அமைப்புக்கள் சூழலைப் போன்று எமது சமூகத்தில் காணப்படும் கலாச்சாரம், கல்வி, விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட காரணிகளுடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவு மற்றும் விளக்கமும், நேர்மனப்பாங்கு சிந்தனையினையும் இனங்காணும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் தீர்வு உட்பட வரவேற்பினைப் பரிசோதனை செய்வதன் மூலம் பரீட்சார்த்தி விளங்கிக் கொள்ளும் சக்தி மற்றும் சம்பவக் கற்கைகள் இதன் மூலம் அளவீடு செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றன.

13.3 **நேர்முகப் பரீட்சை :**

(i) ***பொதுவான நேர்முகப் பரீட்சை*** :

எழுத்து மூலப்பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற ஒழுங்குமுறைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கையினைப் போன்று இருமடங்கு எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதன் போது ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என பரீட்சிக்கப்படும். இதில் தகைமை பெறுவோர் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பொதுவான நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(ii) ***கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை*** :

அதிபர் செயற்பாடுகளுக்குரிய தலைப்புக்கள் ஊடாக முன்வைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக 25 புள்ளிகள் வழங்கப்படும்.

| | ஒப்பளவுகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 04 |
| 2 | முன்வைத்தல் திட்டம் | 04 |
| 3 | முன்வைத்தல் திறன் | 08 |
| 4 | விடய அறிவு | 05 |
| 5 | நேர முகாமைத்துவம் | 04 |
| | மொத்தம் | 25 |

* எழுத்து மூலம் மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் மொத்தத்திற்கமைய கூடுதலான புள்ளிகளைப் பெறுவோர் தொடரொழுங்கில் வெற்றிடங்களுக்கு நிரப்பப்படுவர்.

13.4 **பெறுபேறுகளை வெளியிடல் :**

வர்த்தமானி அறிவித்தலில் 13.1 எழுத்து மூலப் பரீட்சையில் 13.3 (ii) கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமைக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் செயலாளர், கல்வி அமைச்சிற்குக் கையளிக்கப்படும். அதனைத் தொடர்ந்து பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அறிவித்தல் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளம் ஊடாக www.results.exams.gov.lk மூலம் பகிரங்கப்படுத்தப்படும்.

14. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள் :**

14.1 இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள் / தபுதாரர் / அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்குப் பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். ஒரு வருடம் பதில் கடமையின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

14.2 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கை, கட்டளைச் சட்டங்கள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுச் சபையின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய சட்டங்கள் உரியதாகும்.

14.3 இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்று 03 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

14.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 01/2014 இற்கமைய ஏனைய அரசகரும மொழி தொடர்பாக உரிய தேர்ச்சி மட்டம் நியமனத் திகதி தொடக்கம் 05 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இணைப்பு மொழியான ஆங்கில மொழி தொடர்பான தேர்ச்சியினை சகல உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்பு செய்த திகதியில் இருந்து மூன்று (03) வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**குறிப்பு**: உத்தியோகத்தர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திற்காக குறைந்தபட்சம் திறமைச்சித்தி அல்லது அதனை விட உயரிய சித்தியினைப் பெற்றிருப்பின் ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடையும் தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர். ஏனைய உத்தியோகத்தர்கள் இலங்கை அதிபர் சேவைக்காக ஆங்கில மொழிப் பரீட்சைக்குத் தோற்றி குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் இருப்பின் அது தொடர்பாக மற்றும் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரினால் தீர்மானம் எடுக்கப்படும்.

16. சிங்களம், தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது எனக் கொள்ளப்படும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018**

Limited Competitive Examination for the Recruitment to the Grade III of the Sri Lanka Principals' Service - 2018

1. (i) பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

(ii)

| விண்ணப்பிக்கும் நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| (i) | |
| (ii) | |

2. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ----.
(உதாரணமாக : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
(ii) இறுதியில் குறிப்பிடும் பெயரை முதலிலும் ஏனைய முதலெழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் :
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உதாரணமாக : GUNAWARDHANA, H.M.S.K)
(iii) முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்) :----.

3. (i) அனுமதிப் பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ----.
(ii) நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) :----.
(iii) கடமை முகவரி (சிங்களம்/தமிழில்) :----.
(iv) மின்னஞ்சல் முகவரி :----.

4. பால் ஆண்/பெண் : ----.
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

6. தொலைபேசி இலக்கம் : நிலையான :

கையடக்க :

7. (i) பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

(ii) 2018.06.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

8. (i) இலங்கை ஆசிரியர் சேவையில் நியமனம் பெற்ற திகதி : ----.
(ii) சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்ட திகதி :----.
(iii) சேவை நிலையம் :----.
(iv) 2018.06.01 ஆந் திகதியன்று சேவைக்காலம் :----.

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. கல்வித் தகைமை :

| கல்வித் தகைமை* | சித்தியடைந்த ஆண்டு | பெற்றுக்கொண்ட நிறுவனம் | சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| கல்விமாணிப் பட்டம் | | | |
| பட்டம் (துறை ..........) | | | |
| பட்டப்பின் கல்வி டிப்ளோமா | | | |
| ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் | | | |
| தேசிய போதனாவியல் டிப்ளோமா | | | |

* வர்த்தமானி அறிவித்தலில் 6.2 இற்குரியதாக விண்ணப்பிப்பதற்குத் தகைமை பெற்றுள்ள கல்வித் தகைமைகள் தொடர்பான தகவல்களை மாத்திரம் இங்கு குறிப்பிடவும்.

10. பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான நிதிப் பற்றுச்சீட்டினை (ரிசிப்ட்) சிறந்த முறையில் ஒட்டவும்.

நிதிப் பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்.

11. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :
2018.06.01 ஆந் திகதியன்று அண்மித்த ஐந்து வருடங்கள்/ஆறு வருடங்களுக்குள் சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றுள்ளதாகவும், அக்காலத்திற்குள் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர) எம்முறையிலேனும் அல்லது ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படவில்லையென்றும் இத்தால் அறிவிக்கிறேன். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்ற நான் தகைமை கொண்டவர் என்றும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் நம்பிக்கைக்கு அமையவும் உண்மையானதென்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ........... மற்றும் ........... ஆந் திகதி கொண்ட நிதி பற்றுச்சீட்டு இத்துடன் ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறேன். பரீட்சை தொடர்பான சட்டதிட்டங்களுக்கமைய செயற்படுவதாகவும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புகளுக்கமைய நான் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் பரீட்சார்த்த அந்தஸ்தை இழக்க வேண்டி ஏற்படும் என்றும் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. அதிபரின் சான்றிதழ் :

............................. (பெயர்) ஆகிய இவ்விண்ணப்பதாரி ....................... ஆந் திகதி தொடக்கம் பாடசாலையில் சேவையாற்றுவதாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும், அவர் என் முன்னிலையில் விண்ணப்பப்படிவத்தில் ஒப்பமிட்டதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
அதிபரின் கையொப்பம்.
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

பெயர் :----.
சேவை நிலையம் :----.
திகதி :----.

13. வலயக் கல்விப் பணிப்பாளரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்/ ஆசிரியையான வண./ திரு./ திருமதி/செல்வி .............................. ஆகிய இவர் ............................... கல்லூரியில் சேவையாற்றுவதாகவும், 2018.06.01 ஆந் திகதியன்று அண்மித்த ஐந்து வருடத்திற்குள்/ஆறு வருட காலத்திற்குள் அவர் சகல சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றுள்ளதாகவும், அக்காலத்திற்குள் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர) எக்காரணம் கொண்டும் ஒழுக்காற்றுத்

தண்டனைக்கு அவர் உட்படவில்லையென்றும், சுயவிபரக் கோவைக்கேற்ப இவ் விண்ணப்பப்படிவத்தில் 01-09 வரையில் விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானது என்றும் உரிய ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
சேவை நிலையம் :----.
திகதி :----.

10-1133

---

## நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு

### தொழில் நியாய சபைச் செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தொகுதி 02 சேவைகள் வகுதியின் சுருக்கெழுத்தாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) – 2018

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள தொழில் நியாய சபை அலுவலகங்களில் வெற்றிடமாக உள்ள 25 சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரிப் படிவத்தின் படி தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "செயலாளர், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டடத்தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் "தொழில் நியாய சபைச் செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தொகுதி 02 சேவைகள் வகுதியின் சுருக்கெழுத்தாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்து கொள்ளல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2018.11.15 ஆகும்.

**குறிப்பு** : விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட கடிதமொன்று தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதி நாள் வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய நட்டங்களுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் முறை**.- நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றால் நடாத்தப்படுகின்ற தொழிற் பரீட்சையொன்றின் மற்றும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை சபையொன்றினால் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற புள்ளிகளின் மீது தெரிவு செய்யப்படுகிறது. நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் படி நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படும்.

2. **சேவை நிபந்தனைகள்**.-

(i) இந்நியமனம் நிரந்தரமானது.

(ii) இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற அலுவலர் ஒருவர் 03 வருடகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவதுடன், அக்காலத்துள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளின் படி மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 05 வருடக்காலத்துள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசகரும மொழியல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த அலுவலர்களால் 03 வருடகாலத்துள் ஓர் அரசகரும மொழி பற்றிய தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், மற்றைய அரசகரும மொழி பற்றிய தேர்ச்சி 05 வருடக்காலத்துள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

3. **சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் தரம் - தரம்** III.-

4. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி MN-1-2016 ரூபா 27,140-10 × 300 - 11 × 350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540 ஆகிய (மாதாந்த) சம்பள அளவுத்திட்டமொன்று உரித்தாகிறது. தரங்கள் முறை சம்பந்தப்பட்ட ஆரம்ப சம்பள படிநிலை ரூபா 21,532 ஆகும்.

5. **தகைமைகள்**.-

I. **கல்வித் தகைமைகள்** :

(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத்தராதர (உயர்தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (01) பாடத்திலாவது (பொது சாதாரணப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

II. **தொழிற்றகைமைகள்** :

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சுருக்கெழுத்து பற்றிய 06 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியொன்றைக் கற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சா.த.) பரீட்சையில் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து பாடத்திற்காக திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல்.

III. **அனுபவம்** :

விசேட தகைமையொன்றாகக் கருதப்படும்.

6. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

7. **உடற்றகைமைகள்**.-

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உகந்த, சிறந்த உடல் மற்றும் உளநலம் கொண்டவராக இருத்தல்.
(ii) பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியான உடல் ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல்.

8. **பிற தகைமைகள்**.-

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரர் நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டுமென விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படுகின்ற தினத்தில் அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

9. **ஆட்சேர்ப்பு முறை**.-

9.1 **தொழிற் பரீட்சை**.-

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படுகின்ற தொழிற் பரீட்சையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

**தொழிற் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் விதம்** :

| பாடம் | உச்ச புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|
| சுருக்கெழுத்து | 100 | 40% |
| தட்டெழுத்து | 100 | 40% |

9.2 **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**.-

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உயரிய புள்ளிகள் | சித்தியடையும் புள்ளிகள் |
|---|---|---|
| 01. மேலதிக கல்வித் தகைமைகள் | 10 | ஏற்புடையதாகாது |
| 02. மேலதிக தொழிற்றகைமைகள் | 20 | |
| 03. மொழி அறிவு (சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழித்தேர்ச்சி) | 10 | |
| 04. கணினி அறிவு | 15 | |
| 05. அனுபவம் | 40 | |
| 06. நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்பட்ட திறன் | 05 | |
| மொத்தம் | 100 | |

9.3 **பொது நேர்முகப்பரீட்சை.-**

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு**: தொழிற் பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரரில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் தொழிற் பரீட்சை ஆகிய இரண்டிலும். பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறன் தொடர்வரிசையின்படி மற்றும் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் படி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

10. விண்ணப்பம் 22-29 செ. மீ. அளவிலான ஏ4 கடதாசிகளில் தயார் செய்யப்பட வேண்டுமென்பதுடன், 1-11 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 12-15 வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் 16 தொடக்கம் ஏனைய தலைப்புக்கள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயார் செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக பூர்த்திசெய்ய வேண்டும். சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்படாதுள்ள, அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத, உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றை தன்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும் - மேலும் பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பம், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு இயைந்ததாக உள்ளதா என விண்ணப்பதாரரால் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாதுவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் அறிவித்துக் கொள்கிறேன். விண்ணப்பங்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயார் செய்ய வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

**கவனிக்க.-**

(i) விண்ணப்பத்துடன் எவ்வித ஆவணமோ அல்லது அதன் பிரதியோ இணைக்கப்படலாகாது.
(ii) வேண்டப்படும் போது ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள அலுவலர்கள் தமது திணைக்கள/நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்.-** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 300.00 தொகையொன்றை மக்கள் வங்கியின் நகர மத்தி கிளையின், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரின் பெயரில் உள்ள 176100199025184 ஆம் கணக்கு இலக்கத்தில் வரவு வைக்க வேண்டும். சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

12. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகள், காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை சம்பந்தமாக வழங்கப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் தொழில் நியாய சபைச் செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தொகுதி 02 சேவைகள் வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் நிபந்தனைகள் இப்பதவிக்காக ஏற்புடையதாகின்றன.

பியுமந்தி பீரிஸ்,
செயலாளர் (பதில்),
நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு.

2018, ஒற்றோபர் 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

இல. ..........................................
அலுவலக உபயோகத்துக்காக

மொழிமூலம்

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

(சம்பந்தப்பட்ட கூட்டினுள் (√) அடையாளமிடுக.)

**நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு**

தொழில் நியாய சபைச் செயலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத தொகுதி 02 சேவைகள் வகுதியின் சுருக்கெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
2. நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) :----.
3. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
4. கடிதங்கள் கிடைக்கப்பெற வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(நிரந்தர முகவரி மாறுபடுமாயின் மாத்திரம் பூர்த்தி செய்க.)
5. தொலைபேசி இலக்கம் :----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

7. ஆணா, பெண்ணா ? என்பது :----.
8. பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.
9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளுக்கு வயது :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
10. இனம் :----.
11. விவாகமானவரா/விவாகமாகாதவரா :----.
12. க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

13. க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :
ஆண்டு :----. சுட்டெண் :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

14. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 05 ஆம் பந்தியின்படி தகைமைகள் :
(i) கல்வித் தகைமைகள் : ----.
(ii) தொழிற்றகைமைகள் :----.
(iii) அனுபவம் :----.

15. மொழித்தேர்ச்சி - (சம்பந்தப்பட்ட நிரலில் √ அடையாளத்தை இடுக.):

| | மிக நன்று | நன்று | சாதாரணம் | பலவீனம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

16. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு.

| |
|---|
| |

விண்ணப்பதாரியின் சான்றிதழ் :
............ ஆகிய என்னால் இதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை எனத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படவோ அல்லது வினைத்திறமையின்மையின் மீது சேவையிலிருந்து ஓய்வுபெற செய்யப்படவோ இல்லை எனவும், பதவிகளைக் கைவிட்டுச் சென்ற ஒருவராக கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகுதியற்றவனாவேன் எனவும். தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி தொழிலிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
திகதி :----. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10-1508

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.